மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, செயற்குறிப்புகளை வைத்துத்தான் நடவடிக்கை எடுக்கப்படும். ஆகவே அந்த செயற்குறிப்புகள் கேட்கப்பட்டிருக்கின்றன. அது கிடைத்ததும் அதன் பேரில் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி : தலைவர் அவர்களே, பொதுவாக பேரூராட்சியை நகராட்சியாக உயர்த்துவதற்கு என்னென்ன தகுதிகள் தேவை. அனைத்துத் தகுதிகளிலிருந்தும் பொருளாதாரத் தகுதி பெறாவிட்டால் அரசே உதவி செய்து அந்தப் பேரூராட்சியை நகராட்சியாக ஆக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, ஒரு பேரூராட்சியை நகராட்சியாக மாற்றுவதற்கு சில விதிமுறைகள் இருக்கின்றன. குறிப்பாக பொது இனங்களின் கீழ் அதன் ஆண்டு வருமானம் 2 லட்சம் ரூ. இருக்க வேண்டும். இதர வருவாய்களின் கூடிய மொத்த வருவாய் ஆண்டுக்கு 3 லட்சம் ரூபாய் இருக்க வேண்டும். மக்கள் தொகை 20 ஆயிரத்துக்கும் மேற்பட்டு இருக்க வேண்டும்.

வேடசந்தூர் நகரில் பொது மருத்துவமனை அமைக்கும் திட்டம்.

* வினா எண் 195—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தாலுக்காவிற்கென வேடசந்தூர் நகரில் பொது மருத்துவமனை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், வேடசந்தூரில் உள்ள ஆரம்பச் சுகாதார நிலையத்தை எரியோட்டுக்கு மாற்றும் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, வேடசந்தூர் தாலுக்காவாக மாற்றப்பட்டு, 13 ஆண்டுகள் ஆகிவிட்டன. இருப்பினும் தாலுக்கா மருத்துவமனை இல்லாத தாலுக்காவாக வேடசந்தூர் உள்ளது. அங்கேயுள்ள மருத்துவ மனையில் படுக்கை வசதிகள் மற்றும் தாலுக்கா மருத்துவ மனையில் இருக்க வேண்டிய வசதிகள் செய்து தரப்படவில்லை. குறைந்த பட்சம் அந்தப் பகுதி மக்கள் 35 முதல் 70 கிலோ மீட்டர் வரயில் பயணம் செய்து தான் படுக்கை வசதி பெற்று மருத்துவ உதவி பெற வேண்டிய நோய்களுக்கு மருத்துவ வசதி பெற வேண்டியுள்ளது. ஆகவே, அங்கே உடனடியாக படுக்கை வசதி செய்து கொடுக்க வேண்டும் அல்லது அங்கேயுள்ள சுகாதார மருத்துவ நிலையத்தில் 25 முதல் 30 படுக்கை வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?

1982 பிப்ரவரி 16]

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, அங்கே தாலுக்கா மருத்துவமனை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை என்றுதான் சொன்னேன். ஆனால் அங்கே இருக்கும் ஆரம்ப சுகாதார நிலயத்தை 20 படுக்கைகள் கொண்ட ஒரு பெரிய மருத்துவ மனையாக உயர்த்து வதற்கு 29-6-81 ஆம் நாளிட்ட அரசாணையில் உத்தரவிடப் பட்டுள்ளது ரூ 2.2 லட்சம் படுக்கை வசதிகள் செய்யவும், 2 லட்ச ரூபாய் கட்டிடங்கள் போன்றவற்றிற்காகவும் என்கிற அடிப்படையில் கிட்டத்தட்ட 5 லட்ச ரூபாய் செலவில் அங்கே யுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை விஸ்தரிக்க அரசு ஆணை யிட்டுள்ளது. அந்த மருத்துவமனை ஒரு தாலுக்கா மருத்துவ மனையில் உள்ள வசதிகளுக்கு ஒப்ப விஸ்தரிக்க உத்தரவிடப்பட் டுள்ளது இந்த உத்தரவு போட்டு 8 மாதங்கள் ஆகியிருக் கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு வேடசந்தூர் வி பி பாலசுப்பிரமணியன்: பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல்லில் இயங்கி வருகின்ற மருத்துவ மனையில் சிகிச்சை பெறுகின்ற நோயாளிகளில் 30% முதல் 50% வரையில் வேடசந்தூர் பகுதியைச் சேர்ந்த மக்களாகத்தான் இருப்பார்கள். ஆகவே, வேடசந்தூருக்கு அருகில் உள்ள எரி யோட்டில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். வேடசந்தூரில் இருக்கும் ஆரம்ப சுகாதார நிலையம் விஸ்தரிக்கப்படும். பக்கத்திலேயே இன்னொரு ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிப்பதைப்பொறுத்த வரையில், ஒரேதொகுதியில் இப்படி ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருப்பதை விட, பரவலாக அவைகள் அமைக்கப்பட வேண்டும் என்பதால், அது பற்றி இப்போது சிந்திப்பதற்கு இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

### தாலுகா அரசு மருத்துவமனைகளில் முடம் நீக்கும் சிகிச்சை நிலையம் ஆரம்பிக்கும் திட்டம்.

*வினா எண் 196—திரு. செ. செம்மலை: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா —

தாலுகா தலைமை அரசு மருத்துவமனைகளில் முடம் நீக்கு சிகிச்சை நிலையம் (Physiotherapy Section) ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் எச் வி ஹண்டே: தற்போது சில தாலுக்கா அரசு மருத்துவ மனைகளில், முடம் நீக்கும் சிகிச்சை நிபுணர்கள் (Physiotherapists) நியமிக்கப்பட்டுள்ளார்கள். மேலும் இதை விஸ்தரிக்கும் வாய்ப்பு உள்ளது.

SATYAMEVA JAYATE — TRUTH ALONE TRIUMPHS